<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>MCOP. No. 32/2025</u>**

ம.சா. 1 தேதி.24.03.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரம்யா | த/பெ, | சிவதாஸ் |
| வயது | 26 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் 3ம் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

எனது தரப்பில் ஆவணங்களாக 18.10.2022 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா.ஆ.1** ஆகவும், 20.03.2009 தேதியிட்ட விபத்தை ஏற்படுத்திய TN 51 Q 2308 என்ற வாகனத்தின் R.C. புத்தகம் நகல் **ம.சா.ஆ.2** ஆகவும், 16.12.2022 தேதியிட்ட TN 51 Q 2308 வாகனத்தின் மோட்டார் வாகய ஆய்வாளர் அறிக்கை நகல் **ம.சா.ஆ.3** ஆகவும், 30.05.2012 தேதியிட்ட மணிகண்டன் பயணம் செய்த வாகனம் TN 51 L 9706 ன் RC புத்தகம் நகல் **ம.சா.ஆ.4** ஆகவும், 10.01.2023 தேதியிட்ட TN 51 L 9706 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் **ம.சா.ஆ.5** ஆகவும், 20.11.2017 தேதியிட்ட விபத்தில் இறந்த மணிகண்டனின் ஓட்டுனர் உரிமம் நகல் **ம.சா.ஆ.6** ஆகவும், 18.10.2022 தேதியிட்ட மணிகண்டனின் பிரேத பரிசோதனை சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.7** ஆகவும், 13.02.2023 தேதியிட்ட மணிகண்டனின் இறப்பு சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.8** ஆகவும், 12.06.2023 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.9** ஆகவும், மனுதாரர்களின் வங்கி புத்தகம் மற்றும் ஆதார் அடையாள அட்டை (4 நபர்கள்) (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) நகல்கள் **ம.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.